தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 22, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2033
2002 ஏப்ரல் 5, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு."

காலம் தாழ்த்தாது விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும், ஆட்சி புரிபவர்களுக்கு நீங்காமல் நிலைத்து இருக்கிற பண்புகள் ஆகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 95, திரு. ப. இளவழகன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

95—

பெண்கள் உயர்நிலைப் பள்ளி

***1680—திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் பேரூராட்சியில் ஆண், பெண் இருபாலரும் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளியில் 750 மாணவியர் பயில்வதால் அரியலூர் நகரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரியலூர் பேரூராட்சியில் உள்ள இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து மகளிரைத் தனியாகப் பிரித்து மகளிர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

53-151—1a

உயர்நிலைப் பள்ளியாகத் தொடங்க கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. வரும் கல்வியாண்டில் கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், பெண்கள் உயர்நிலைப் பள்ளி தொடங்க உரிய நடவடிக்கை எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கல்வியறிவைப் பொறுத்தவரையில், பெரம்பலூர் கல்வி மாவட்டந்தான் தமிழகத்திலேயே மிகவும் பின்தங்கிய புள்ளிகளை எடுத்திருக்கிறது. அரியலூர் மேல்நிலைப் பள்ளி, 1,786 மாணவ மாணவியர்கள் படிக்கக்கூடிய அந்தப் பள்ளி, அதிலே மாணவியர் மட்டும் 657 பேர் பயின்று வருகின்றார்கள். அங்கே தனியாக பெண்களுக்கென உயர்நிலைப் பள்ளி கட்டுவதற்கான இடங்கள் நிறைய இருக்கின்றன. சர்வே எண் 226/3-ஏ என்ற எண்ணிலே ஏகப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. ஆகையினால் பெண்களுடைய கல்வியறிவை மேம்படுத்தவும், மாதரசி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் பெண்களுடைய கல்வித் தரம் மேம்படுவதற்காகவும், பெண்கள் கல்வியறிவிலே உயர்ந்தவர்கள் என்பதை நிலை நிறுத்துவதற்காகவும், தனியாக மாணவியர்களுக்கென பெண்கள் உயர்நிலைப் பள்ளி அமைத்துக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு நல்ல கல்வியைத் தரவேண்டும், தரமான கல்வியைத் தரவேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அரசானது முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனடிப்படையில் பார்க்கும்போது, அரியலூரைப் பொறுத்தவரையில், அங்கு இந்த அரசு மேல்நிலைப் பள்ளியைத் தவிர 3 தனியார்ப் பள்ளிகளும் செயல்படுகின்றன. அதில் ஒரு மேல்நிலைப் பள்ளி பெண்களுக்காகவே அரியலூரில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இருப்பினும் அரசாங்கத்தின் சார்பாக உயர்நிலைப் பள்ளி தொடங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு செயல்படுத்தலாம் என்பதை அங்கிருக்கும் முதன்மைக் கல்வி அலுவலரும் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு சிபாரிசு செய்திருக்கின்றார்கள். ஆனால், உயர்நிலைப் பள்ளியை உருவாக்குவதற்குப் பொதுமக்கள் பணத்தைக் கட்டுவது, பங்குகள் கட்டுவது போன்ற சிலவற்றைச் செய்தார்கள் என்றால், இந்த ஆண்டு அந்தக் கருத்துரு அனுப்பிவைக்கப்படுமானால்

2002 ஏப்ரல் 5]

இந்த அரசு அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 96, திருமதி காசாம்பு பூமாலை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

96—

பாலிடெக்னிக்

***5309—திருமதி காசாம்பு பூமாலை:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் அரசு தொழிற் கல்வி பயிற்சி மையம் (பாலிடெக்னிக்) ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இரண்டிற்கும் இல்லை.

திருமதி காசாம்பு பூமாலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக உள்ளது. மலைவாழ் மக்கள் அதிகமாக வசித்து வருகின்ற தொகுதி ஆகும். இங்கு 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு வரை படித்த மலைவாழ் மாணவ மாணவிகள் வெளியில் சென்று படிக்க இயலாத காரணத்தால், சங்கராபுரம் பகுதி அல்லது கல்வராயன் மலைப் பகுதியில் ஓர் அரசு பாலிடெக்னிக் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியானது விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒரு பகுதியாகும். விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவினுடைய அங்கீகாரம் பெற்று சுமார் 5 பாலிடெக்னிக்குகள் செயல்பட்டு வருகின்றன. ஒரு Polytechnic-ஐ உருவாக்க வேண்டுமென்றால்—நிலங்கள் அல்லாமல் மற்ற செலவினங்கள் ஒரு Polytechnic-ஐ உருவாக்குவதற்கு மட்டும் 10 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அந்த 10 கோடி ரூபாயில் Polytechnic-ஐ